
# திராவிடத்தால் வாழ்கிறோம்

841

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

11

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# புதுமைப்பித்தன்

# அரசியல் வகுப்பு எடுத்த பித்தன்!

திராவிட இயக்க நாடக மேடைகளைக் கண்டு அன்றைய ஆதிக்கவாதிகளும் ஆட்சியாளர்களும் மிரண்டு போன நிலையில், அதைப் பிரதிபலிக்கும் வகையில் வந்த படம்தான் 'புதுமைப்பித்தன்'.

திரைப்படத்தின் தொடக்கமே கூர்மையான சமூக, அரசியல் விமர்சனத்துடன் தொடங்கும். படத்தின் தொடக்கக் காட்சியில் நாயகன் ஜீவகனும் அவனது நண்பன் அறிவுமணியும் கப்பலில் பயணம் செய்து, நாடு திரும்பிக் கொண்டிருப்பர். அப்போது கடலில் திமிங்கிலத்தைப் பார்த்து விட்டு அறிவுமணி ஜீவகனின் உரையாடல் இது...

**அறிவுமணி:** ஜீவா, பார்க்கவே பயமா இருக்கு, இந்தக் கடவுள் அழகான கடலையும் படைத்து, அருமையான முத்தையும் படைத்து இந்தப் பயங்கரமான திமிங்கிலத்தையும் படைத்திருக்கிறாரே, ஏன்?

**ஜீவகன்:** அறிவுமணி, திமிங்கிலம் கடலில் மட்டுமல்ல! நாட்டிலும் உண்டு. மனிதத் திமிங்கலங்களும் உள்ளன.

**அறிவுமணி:** அய்யய்யோ... அப்படின்னா அந்த மனுசத் திமிங்கிலத்தை அவசியம் பார்க்கணுமே.

**ஜீவகன்:** கரை சேர்ந்ததும் காண்பிக்கிறேன் கவலைப்படாதே, என்று சொல்வான்.

மற்றொரு காட்சியில், ஜீவகனின் நண்பன் அறிவுமணி தங்களுக்கு உதவும் வீரனைப் பின்தொடரும் காட்சியில், அவ்வீரன் ஒரு வீட்டிற்குள் நுழைந்துவிடுகிறான். அப்போது தெருவில் நடந்து செல்லும் மனிதனை நோக்கி, அய்யா இது யாருடைய வீடு? என்று அறிவுமணி கேட்கிறான். அம்மனிதன் பதில் சொல்லாமல் அமைதியாக நிற்கிறான். அறிவுமணிக்கு கோபம் வருகிறது. அப்போது...

**அறிவுமணி:** அய்யா இந்த வீடு யாருடையது? முக்கியமான விசயத்துக்காக கேட்கிறேன், பதில் சொல்லுங்க இந்த வீடு யாருடையது?

அப்போது அவ்வழியாக நடந்து செல்லும் மற்றொரு மனிதன் அறிவுமணியிடம்...

மற்றொரு மனிதன்: யோவ், ஏய்யா... அடிக்கப்போறே அந்த ஆளை? பரிதாபமா இல்லை?

**அறிவுமணி:** ஏய்யா, கேட்க கேட்க பதிலே சொல்லாம இருந்தா கோபம் வராதாய்யா? நான் என்ன சாதாரணமான ஆளா? தெருவுல போறவனா? அரசாங்கத்துல முக்கியமான எடத்துல இருப்பவன்யா

**மற்றொரு மனிதன்:** ஆமா ஆமா... பெரிய கிரீடத்து மேல இருக்குறே! இந்த அரசாங்கத்துலதான் இந்த ஆளோட நாக்க அறுத்து எறிஞ்சுட்டாங்கலே. எப்படியா பதில் சொல்வாரு?

**அறிவுமணி :** அரசாங்கத்துல நாக்க அறுத்தெறிஞ்சுட்டாங்களா? எதுக்காக, ஏன்?


**மற்றொரு மனிதன்:** இந்த அரசாங்கத்தை மக்கள் மன்றத்துல எதிர்த்துப் பேசுனாராம், அதுக்கு இந்தத் தண்டனை.

**அறிவுமணி:** ஓகோ... அப்படின்னா இந்த அரசாங்கத்துக்கு பேசுற ஆளே வேணாமா? ஊமைதான் வேணுமா?

என்று எழுதியிருப்பார். யோசித்துப் பாருங்கள்! 1957 - ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் திரையரங்கில் இந்த வசனம் ஒலித்தபோது மக்கள் எத்தனை ஆரவாரம் செய்து, கை தட்டி வரவேற்றிருப்பார்கள். அதே நேரம் அதாவது ஏமாற்றுப் பேர்வழிகளின் சுயநலத்திற்கும், பித்தலாட்டத்திற்கும் துணை செய்யும் ஆயுதமாகவே இந்த நாட்டில் ஜாதகமும், சோதிடமும் விளங்குகின்றன என்பதையும், ஜாதகம், சோதிடம் இவற்றினைக் காட்டி, மக்களை ஏய்த்து எவ்வாறு எத்தர்கள் தங்களது அதிகாரத்தையும், சுக போக வாழ்க்கையையும் நிலைநிறுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் கலைஞர் நேரிடையாகச் சொல்லாமல், மிக நுணுக்கமாக அம்பலப்படுத்தும் இடமாக இக்காட்சி அமைக்கப்பட்டிருக்கும்.

ஊமை மக்களின்





அன்றைய ஆட்சி யாளர்களுக்கு, இந்த வசனம் எவ்வளவு தூரம் கோபத்தைக் கிளறி விட்டிருக்கும் என்பதையும் யோசித்தால், கலைஞர் திரைக்கதையில் 'கலகக்காரர்' என்பதை அறியலாம்.

### நுட்பமான பிரச்சாரம்!

நறுக்குத் தெறித்தாற் போன்ற அரசியல் வசனங்கள் இத்திரைப்படம் முழுமையும் விரவிக் கிடக்கின்றன. கலைஞர் மிக நுணுக்கமாக, தனது பகுத்தறிவுப் பிரச்சாரத்தை முன் வைத்த காட்சியும் இப்படத்தில் உண்டு.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள மணிபுரி சக்கரவர்த்தியிடம் அவர் கையெழுத்திட்டுத் தர வேண்டிய சாசனத்தை, சேனாதிபதி பராக்கிரமன் வாசித்துக் காட்டும் காட்சியில்..., அவன் வாசிக்கும் சாசனத்தின் வரிகளைக் கேளுங்கள்...

**"பராக்கிரமன்:** 'மணிபுரி மண்டலத்தின் மாமன்னனாகிய நான் குடிமக்களுக்கும் கொலு மண்டபத்துப் பிரதானிகளுக்கும் இந்தச் சாசனத்தின் மூலம் அறிவிப்பதாவது... அரண்மனைச் சோதிடர் எனக்கு எந்த நேரத்திலும் அகால மரணம் ஏற்படலாம் என்றும், வெளிநாடு சென்றுள்ள ஜீவகனுக்கும் ஜாதகம் சரியில்லாததால் உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் உருவாகலாம் என்றும் தெரிவித்துள்ளார். சோதிடர் மொழிப்படி அப்படி ஏதாவது எனக்கு ஏற்பட்டு விட்டாலும், இளவரசன் ஜாதகப் பலனுக்கு இரையாகி விட்டாலும் இந்த ராஜ்யம் என் தம்பி பிரதாபசிம்மனுக்கும் அவன் சந்ததியாருக்கும் சொந்தமுடையதாக ஆக்கப்பட வேண்டுமென்று மனப்பூர்வமாக இந்தச் சாசனத்தில் எழுதியிருக்கிறேன். இப்படிக்கு .......' இந்த இடத்தில் தான் நீங்கள் கையெழுத்திட வேண்டும் என்கிறான் பராக்கிரமன்.



> "ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயகக் குரலாக மேலோங்கி இருந்தது, கலைஞரின் புதுமைப்பித்தன்."

நாடகக் குழுவில் இருப்பவர்களை ஜீவகனுக்கு இன்பவல்லி அறிமுகம் செய்து வைக்கும் காட்சியில் ஜீவகன் பேசுவதாக கலைஞர் எழுதியிருப்பார்.

**"ஜீவகன்:** ம்... கையையும் காலையும் ஒடிக்கலாம் கண்ணையும் காதையும் குத்தலாம். ஆனால், உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளையுமா உடைத்துவிட முடியும்? முட்டாள்கள். வரலாறு படிக்காத வஞ்சகர்கள். காலை இழந்தோர், கரம் இழந்தோர் தொகை இன்று பெருகலாம், இதன் விளைவு, நாளை முடியிழந்தோர் தொகையல்லவா பெருகும்.

இவ்வாறு கலைஞர் அன்றைய அரசை எதிர்த்து, எழுதிய கூர்மையான வசனங்களைக் கேட்ட மக்கள் 1962-லும், 1967-லும் அதற்கான பதிலைத் திரும்ப அளித்தனர். திமுக-வின் வெற்றியில் கலைஞரின் திரைக்கதை வசனத்திற்கும் ஒரு பங்கிருந்ததை எவரால் மறுக்கவியலும்?

### நாடக மேடைகள்

அடுத்து, நாடகக் குழுவினரை சேனாதிபதி கைதுசெய்து, அரண்மனைக்கு இழுத்து வந்து பிரதாபசிம்மன் முன் நிறுத்தும் காட்சியில், இன்பவள்ளிக்கும் பிரதாபசிம்மனுக்கும் இடையே நடக்கும் உரையாடல் இதோ...

**பிரதாபசிம்மன்:** ஏண்டி சூனியக்காரி, நாடக மேடை மூலமாக நாட்டைக் கவிழ்க்க, நீங்கள் எத்தனை பேர் புறப்பட்டிருக்கிறீர்கள்?

**இன்பவள்ளி:** நாங்கள் நாற்பது பேர். ஆனால் நாட்டைக் கவிழ்க்க அல்ல.

இந்தக் காட்சியில் திராவிட இயக்க நாடக மேடைகளைக் கண்டு அன்றைய ஆதிக்கவாதிகளும், ஆட்சியாளர்களும் மிரண்டு போனதை மனதில் வைத்தே கலைஞர் இவ்வசனங்களை எழுதியிருப்பார் என்று தோன்றுகிறது.

படத்தின் இறுதிக் காட்சியில், ஜீவகன் தனது சித்தப்பா பிரதாபனின் கொடூர ஆட்சி அதிகாரத்தை நோக்கி, "சித்தப்பா சரித்திரம் திரும்பும் ஜாக்கிரதை! புயல் கிளம்பும், அதில் புழுதியாக நீர் பறப்பீர். புரட்சி வெடிக்கும் அந்த நெருப்புக் குழம்பிலே நீ புழுவாகக் கருகி மடிவீர்" எனப் பேசும் வசனம் அனலாகத் தெறிக்கும்.

'புதுமைப்பித்தன்' திரைப்படம் முழுக்க முழுக்க ஆட்சி, அதிகாரம் பற்றிய அரசியல் படமாகவே வந்தது. கலைஞரின் மற்ற திரைப்படங்களில் மேலோங்கிக் காணப்படும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை விடவும் , இப்படம் அன்றைய (1957) கால, அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயகக் குரலாக மேலோங்கி இருந்தது. ஆக, கலைஞரின் புதுமைப்பித்தன் ஓர் அரசியல் சித்தன் என்றால் அது மிகையில்லை!

...காட்சி விரியும்

## நடிகர் சூரியின் முதிர்ச்சியான அணுகுமுறை!

பிரசாந்த் பாண்டியராஜ் இயக்கத்தில் சூரி நடித்துள்ள திரைப்படம் 'மாமன்'. மே 15-ஆம் தேதி வெளியான இத்திரைப்படம் வெற்றியடைய வேண்டுமென்று, சூரியின் ரசிகர்கள் மதுரையில் மண் சோறு சாப்பிட்டு, அந்த வீடியோவைப் பகிர்ந்தனர். மண் சோறு உண்பது, நடிகர்களின் கட் அவுட்டிற்கு பாலாபிஷேகம், மொட்டை அடிப்பது, அலகுக் குத்துவது என விதவிதமான பிற்போக்குத்தனங்களை, பல்வேறு நடிகர்களுக்கு ரசிகர்கள் செய்வது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இத்தகைய பிற்போக்குத்தனங்களை இதுவரை எந்த நடிகரும் கண்டித்ததில்லை. அல்லது அவை, பிற்போக்குத்தனங்கள், இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று வெளிப்படையாகக் கூறியதும் இல்லை.

ஆனால், முதன்முறையாக, தனது ரசிகர்களைக் கடுமையாக எச்சரித்து, முன்னுதாரணமாகியிருக்கிறார் நடிகர் சூரி. 'மாமன்' படம் வெற்றியடைய மண்சோறு சாப்பிட்டவர்களை 'தம்பிகள்' என்று சொல்வதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது. தம்பிகளா, இது ரொம்ப முட்டாள்தனமானது. படம் நன்றாக இருந்தால், கதை நன்றாக இருந்தால் படம் ஓடும். அதைவிட்டு, மண் சோறு சாப்பிட்டால், படம் எப்படி எடுத்தாலும் ஓடி விடுமா என்ன? மிகவும் வேதனையாக இருக்கிறது. அந்தப் பணத்தில் 4 பேருக்கு நீர், மோர், உணவு வாங்கிக் கொடுத்திருக்கலாம். இதுபோன்ற செயலைச் செய்பவர்கள் எனது ரசிகர்களாகக் கூட இருக்கத் தகுதியற்றவர்கள்" என வெளிப்படையாக தனது ரசிகர்களை கண்டித்து, இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

சூரியின் ரசிகர்களுக்கு மட்டுமல்ல, இத்தகைய பிற்போக்குத்தனங்களில் ஈடுபடும் எல்லா ரசிகர்களுக்கும், இந்த அறிவுரை நிச்சயம் பொருந்தும். கண்மூடித்தனமாகத் தங்களைப் பின்பற்றும் ரசிகர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பதே நடிகர்களுக்கு அழகு. அதை நேர்த்தியாகச் செய்த நடிகர் சூரியின் செயல் பாராட்டுக்குரியது.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் மேயரானபோது ...



சாதிக் நூர்

'இசை முரசு' நாகூர் அனிபா அவர்கள் எங்களுக்கு நெருங்கிய உறவினர். என் தந்தை நூர் முகம்மது மாணவப் பருவம் தொட்டே கழகத்தில் இணைந்து தீவிரமாகச் செயலாற்றி வந்தவர். 1996-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், சென்னை மாநகராட்சி மேயராகத் தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சென்னையில் தலைவரைச் சந்தித்து, என் தந்தை வாழ்த்துத் தெரிவித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. எங்கள் இல்லத்தையும் உள்ளத்தையும் அலங்கரிக்கும் படமாக இன்றுவரை திகழ்கிறது.

– சாதிக் நூர், கோவை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### போராட்டத் தலைவர் கலைஞர்!

1958-ஆம் ஆண்டு, நவம்பர், தஞ்சையில் எஸ்.எம்.டி. தனியார் பேருந்து நிறுவன தொழிலாளர்கள் ஊதிய உயர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாகப் போராட்டத்தில் ஈடுபட்ட கழகத்தினர் 538 பேர், தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டனர். இந்தப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற முழுப்பொறுப்பேற்றுச் செயலாற்றினார் கலைஞர். அவரும் போராட்டத்தில் ஈடுபடுகிறார் என்ற நிலைமை ஏற்பட்டதும், பேருந்து நிறுவனத்துக்கும் தொழிலாளர்களுக்கும் சமரசம் ஏற்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.